**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 55/2022**
**Prosecution Witness**:3

| Name | ராமசாமி (PW3) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of February 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது முருகம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு முருகம்பாளையம் அருகே போலீசார் நின்று கொண்டிருந்தார்கள், அப்போது என்னிடம் போலீசார் இந்த விபத்து பற்றி தெரியுமா என்று என்னிடம் கேட்டார்கள் எனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையின்போது கடந்த 23.12.2019ம் தேதி இரவு 07.00 மணி சுமாருக்கு நானும் கரட்டுப்பாளையத்தை சேர்ந்த செந்தில் என்பவரும் முருகம்பாளையம் பிரிவு சண்முகம் வீட்டின் அருகில் நின்று பேசி கொண்டிருந்தபோது குப்புசாமி நாடார் மகன் கணேசன் என்பவர் அவருடைய TN 81 6211 என்ற எண்ணுள்ள TVS XL இருசக்கர வாகனத்தில் பகவதி அம்மன் கோவில் அருகில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்தபோது எதிரில் வந்த TN 33 L 5619 என்ற எண்ணுள்ள TVS XL வண்டியின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்தியதாகவும், அதில் கணேசனுக்கு தலையின் பின்புறம்அடிபட்டு பலத்த ரத்த காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:55:40 +0530

நபரை விசாரிக்க அவர் பொன்னுசாமி மயில்கண்பாளையம் என்று சொன்னதாகவும், தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.04 10:55:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.
**Calendar Case No. 55/2022**
**Prosecution Witness**:4

| Name | சிவகுமார் (PW4) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of February 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது செங்கோடம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 24.12.2019ம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அதற்கு முந்தையநாள் முருகம்பாளையத்தில் நடந்த விபத்து சம்பந்தமாக கொடுமுடி போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னை சாட்சி கையொப்பம் செய்ய சொன்னார்கள். அதற்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

முந்தைய நாள் நடந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்றால் சரியாக தெரியவில்லை. வரைபடத்தில் முந்தைய நாள் ஏற்பட்ட விபத்தின் வாகனங்கள் குறிக்கப்பட்டிருந்ததா என்றால் 7 வருடமானதால் நினைவில் இல்லை. நான் கையொப்பம் செய்யும்போது சம்பவ இடத்தில் விபத்தில் சிக்கிய வாகனங்கள் அங்கு இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. தென்வடல் ரோட்டில் கிழக்கு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.04 10:55:49 +0530

நோக்கி பிரியும் ரோட்டில் மேற்கு புறமாக நின்று கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.04 10:55:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.